**(ஆவணி 14) 2023 ஆகஸ்ட் 31-ம் தேதி வியாழக்கிழமை**

**முற்பகல் 11:00 மணிக்கு**

**திருவாரூர் நகர்மன்ற சாதாரணக் கூட்டம் நடைபெறும் அச்சமயம்**

**கீழ்கண்ட பொருள்கள் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும்**

**முன்னிலை: திருமதி.செ.புவனப்பிரியா செந்தில், நகரமன்ற தலைவர்**

| பொருள் எண் மற்றும் கூட்ட பொருள்கள் விபரம் | தீர்மான எண் |
|---|---|
| பொருள் எண் : 1<br>நகரமன்ற தலைவர் அவர்களால் கொண்டுவரப்பட்ட தீர்மானம்<br>மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் 25.08.2023 அன்று தமிழ்நாடு முழுவதும் உள்ள அரசு பள்ளிகளிலும் திருவாரூர் நகராட்சியின் ஆறு (6) பள்ளிகளிலும் முதலமைச்சரின் காலை சிற்றுண்டி திட்டத்தினை தொடங்கிவைத்தமைக்கு இந்நகர்மன்றத்தில் நன்றி தெரிவித்து தீர்மானத்தை நிறைவேற்றிடுமாறு கேட்டுக்கொள்கிறேன். | 368)<br>தீர்மானிக்கப்பட்ட்து |
| பொருள் எண் : 2<br>16-வது வார்டு நகரமன்ற உறுப்பினர் திரு.சு.நா.அசோகன் அவர்களால் கொண்டுவரப்பட்ட தீர்மானம்<br>காட்டுக்கார தெருவில் நான்கு மின்கம்பங்கள் மற்றும் தெருவிளக்குகள் பொருத்தி தர கேட்டுக்கொள்கிறேன்.<br>சபாபதி ஆற்றங்கரை தெருவில் நான்கு மின்கம்பங்கள் மற்றும் தெருவிளக்குகள் பொருத்தி தர கேட்டுக்கொள்கிறேன். | 369)<br>தீர்மானிக்கப்பட்ட்து |
| பொருள் எண் : 3<br>18-வது வார்டு நகரமன்ற உறுப்பினர் திருமதி.ரா.ஆசைமணி அவர்களால் கொண்டுவரப்பட்ட தீர்மானம்<br>முனிசிபல் காலனியில் உள்ள சமுதாய கூடத்தினை சரிசெய்து தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.<br>முனிசிபல் காலனியில் உள்ள பொது கழிவறையை சரிசெய்து தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.<br>சூரியன்குளம் தென்கரை முதல் சக்திமரவாடி வரை உள்ள மழைநீர் வடிகாலை தூர்வாரி தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.<br>காரைகாட்டு தெரு தார்சாலைக்கு பேட்ச் வொர்க் செய்து தருமாறு கேட்டுக்கொள்கிறேன். | 370)<br>தீர்மானிக்கப்பட்ட்து |
| பொருள் எண் : 4<br>25-வது வார்டு நகரமன்ற உறுப்பினர் திரு.ஜெ.அய்யனார் அவர்களால் கொண்டுவரப்பட்ட தீர்மானம்<br>பழைய தஞ்சை சாலை பெட்ரோல் நிலையம் அருகில் உள்ள வாய்கால் மதகிற்கு பாதுகாப்பு சுவர் அமைத்து தர கேட்டுக்கொள்கிறேன்.<br>எல்லையம்மன் சன்னதி தெருவில் உள்ள குளத்துப்பட்டறை சந்து பகுதிக்கு பேவர் பிளாக் சாலை அமைத்து தர கேட்டுக்கொள்கிறேன்.<br>தாலுக்கா அலுவலகம் எதிரில் உள்ள சாலை சந்திப்பில் உயர் கோபுர மின் விளக்கு அமைத்து தர கேட்டுக்கொள்கிறேன்.<br>பழைய பேருந்து நிலையத்தில் உள்ள மருத்துவமனைக்கு சுற்றுசுவர் அமைத்து தர கேட்டுக்கொள்கிறேன். | 371)<br>தீர்மானிக்கப்பட்ட்து |
| பொருள் எண் : 5<br>திருவாரூர் நகராட்சி 2023-2024 ஆம் ஆண்டிற்கான நிர்வாக அறிக்கை தயார் செய்து மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு :-<br>மன்றம் ஒப்புதல் அளிக்கலாம். | 372)<br>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |

| | |
|---|---|
| ந.க.எண்.1750/2023/சி1 | |
| பொருள் எண் : 6<br>திருவாரூர் நகரம் வார்டு 2, பிளாக் 13, நகரளவு எண்.20/1-ல் 3232.50 சதுர மீட்டர் பரப்பளவில் குடியிருப்பு மனைப்பிரிவு அனுமதி கோரி டாக்டர்.அபுல்ஹாசன் என்பவர் விண்ணப்பித்ததன்படி சாலை அமைப்பு வரபடத்தில் அங்கிகரிக்கப்பட்டுள்ளவாறு பொது ஒதுக்கீடுகளை தானபத்திரம் மூலம் நகராட்சி வசம் ஒப்படைப்பு செய்யப்பட்டதை தொடர்ந்து இறுதி ஒப்புதலுக்காக நகர் ஊரமைப்பு உதவி இயக்குனர், திருவாரூர் அவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. நகர் ஊரமைப்பு உதவி இயக்குனர், திருவாரூர் அவர்களால் மனுதாரரின் மனைப்பிரிவு அனுமதி கோரும் விண்ணப்பம் பரிசீலிக்கப்பட்டு ROC NO.10807/2023/TVR/2023/TCP, நாள்.10.08.2023 - ல் தொழில்நுட்ப அனுமதி வழங்கி மனைப்பிரிவு வரைபடத்திற்கு ம.வ./மா.ந.ஊ.அ(TVR) எண்.33/2023 என எண்ணிடப்பட்டு இறுதி ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. நகராட்சி பொறியாளரின் 28.06.2022-ந் தேதிய மதிப்பீட்டின் படி குடிநீர் வசதி மற்றும் வடிக்கால் வசதி அமைக்க ரூ.4,98,000/-(பற்றுசீட்டு எண்.104/01/1/23-24/0003950, நாள்.12.07.2023) நகராட்சி கருவூலத்தில் செலுத்தி உள்ளார். மேலும், மின்கம்பங்கள் மற்றும் தெருவிளக்குகள் அமைக்க தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு ரூ.42.849/- (பற்றுச்சீட்டு எண்.PGNSB116419085, நாள்.08.08.2023) செலுத்தி உள்ளார். மேலும், அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தின் படி நகராட்சி வசம் ஒப்படைப்பு செய்ய வேண்டிய பொது ஒதுக்கீடுகளை பத்திர பதிவு எண்.4626/2023, நாள்.03.08.2023 -ன்படி ஒப்படைப்பு செய்துள்ளார். நகர் ஊரமைப்பு உதவி இயக்குனர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், திருவாரூர் அவர்கள் விதித்துள்ள நிபந்தனைகளுக்கு உட்பட்டு மனைப்பிரிவினை அங்கீகரித்து உத்தரவிடப்பட்டதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு :-<br>மன்றம் பதிவு செய்யலாம் மற்றும் பின்னேற்பு வழங்கலாம்.<br>ந.க.எண்.1676/2023/எப்1 | 373)<br>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |
| பொருள் எண் : 7<br>திருவாரூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் 27.08.2023 அன்று மாண்புமிகு நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அமைச்சர் அவர்களளால் ஆய்வு மேற்கொள்ளப்பட்டதில் திருவாரூர் பைபாஸ் சாலையில் வார்டு எண்.3 பிளாக் எண்.10 நகரளைவை எண்.36ல் அமைந்துள்ள நூலகத்திற்கு செல்லும் சாலை பழுதடைந்த நிலையில் உள்ளதால் பொதுமக்கள் மற்றும் மாணவர்கள் நலன் கருதி மேற்படி நூலகத்திற்கு செல்லும் பழுதடைந்த சாலையினை பேவர் பிளாக் சாலையாக அமைக்க அறிவுரை வழங்கப்பட்டது. அதனைத்தொடர்ந்து மேற்படி இடத்தில் பேவர் பிளாக் சாலை அமைக்க உத்தேச மதிப்பீடு ரூ.17.00 இலட்சத்திற்கு நகராட்சி பொதுநிதியில் பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு :-<br>மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>மேற்படி பணியினை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண். 2594/2021/இ1 | 374)<br>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |

நாள் : 31.08.2023

இடம் : திருவாரூர்

(ஒம்) செ.புவனப்பிரியா செந்தில்
நகர்மன்ற தலைவர்
திருவாரூர் நகராட்சி